**தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனம் - 2022**

-----------------------------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய அறுவடைக்கு பிந்திய முகாமைத்துவ நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிறுவனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,
- நிறுவனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- நிறுவனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 திசெம்பர் 31 இல் மீள்மதிப்பீட்டுத் தொகை ரூபா 695,190 ஆன மற்றும் 2018 மார்ச் 29 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 189,600 ஆன 36 கணனி உதிரிப்பாகங்கள் 2021 திசெம்பர் 31 இல் முற்றாகத் தேய்மானம் செய்யப்பட்டிருந்தன. இந்த கணனிகள் மற்றும் | கணனி உதிரிப்பாகங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீட்டு வழுவைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணனி மற்றும் உதிரிப்பாகங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் தேவையான சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உதிரிப்பாகங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருவதால், மீள்மதிப்பீடு செய்யப்பட்டு மீளாய்வாண்டின் கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் வேதனங்கள் செலவினத்திற்குள், இரண்டு அதிகாரிகளின் ரூபா 684,019 ஆன சம்பள நிலுவைத் தொகை சேர்க்கப்பட்டிருந்தது. அந்த சம்பளம் மற்றும் வேதனங்கள் செலவினத்திற்குள் முன்னைய ஆண்டுக்கான செலவு ரூபா 648,637 ஆகும். இந்த செலவினம் மற்றும் அந்த சம்பளம் மற்றும் வேதனங்களுக்கான ஊழியர் சேமலாப நிதியத்தின் நிறுவனத்தின் பங்களிப்பு ரூபா 77,836 மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் பங்களிப்பு ரூபா 19,459 ஆனது தேக்கி வைக்கப்பட்டு உழைப்புக்களில் சீராக்கப்படாமல் ஆண்டின் செலவொன்றாக கணக்கிடப்பட்டமையால் ஆண்டின் பற்றாக்குறை ரூபா 745,632 அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் சம்பளம் மற்றும் வேதன செலவுகள் கணக்குகளில் சீராக்கப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுக்கல் வாங்கல் மற்றும் நிகழ்வுகள் தொடர்பான நிதிக்கூற்று ஒப்பீடுகள் சரியாக காட்டப்படும் வகையில் காலப்பகுதியுடன் தொடர்பாக கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | ரூபா 175,770 பெறுமதியான இரண்டு கையிருப்பு பொருட்கள் இறுதி இருப்பிற்கு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை மற்றும் காலாவதியான் ரூபா 358,204 கிரயப் பெறுமதியான 12 இரசாயன பொருட்கள் இறுதி இருப்பு மீதியில் உள்ளடக்கப்பட்ட காரணத்தால் இறுதி இருப்பு மற்றும் வருடத்திற்கான மிகை ரூபா 182,434 ஆல் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளில் சீராக்கப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கொடுக்கல் வாங்கல் மற்றும் நிகழ்வுகள் தொடர்பான நிதிக்கூற்று ஒப்பீடுகள் சரியாக காட்டப்படும் வகையில் காலப்பகுதியுடன் தொடர்பாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2023 ஏப்ரல் 20 அன்று கணக்காய்வு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட களஞ்சியசாலை பரிசோதனையின்போது பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட திகதி மற்றும் | கணக்குகளில் சீராக்கப்பட்டு திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| பெறுமதியை அடையாளம் காண முடியாத 42 பொருட்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | | |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | நிதிப் பிரமாணம் 880(1) மற்றும் நிதிப்பிரமாணம் 881 | 612 ஆம் அதிகாரமான அரச உத்தியோகத்தர்களின் பிணை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு பிணை வைக்கப்பட வேண்டிய எந்தவொரு உத்தியோகத்தரிடமிருந்தும் பிணை வைப்பு பெறப்படுவதற்கான நடவடிக்கைகள் நிறுவனத்தினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பிணை வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் ஏற்பபாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | | |
| | XIX ஆம் அத்தியாயத்தின் 5.8 ஆம் பிரிவு | இலக்கம் 01 அரச விடுதி 2017 ஆம் ஆண்டில் ரூபா 4,337,274 ஆன தொகையொன்று செலவிடப்பட்டு திருத்தப்பட்டதன் பின்னர் அந்த ஆண்டு முதல் அவ்விடுதி வசிப்பதற்காக நிறுவனத்தின் கடமைகள் ஒதுக்கப்பட்ட | இந்த விடுதி தலைவருக்கு ஒதுக்கப்பட்ட விடுதி மட்டுமல்ல என்பதுடன் உயரதிகாரிகளுக்கும் அவர்களின் தேவைக்கேற்ப வழங்கப்படுகின்றது. அதன்படி, உயரதிகாரிகள் வருகை தரும்போது கட்டணம் வசூலிக்க | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| தலைவருக்கு வழங்கப்பட்டிருந்தது. | முடியாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 15,193,030 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 2,251,969 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 12,941,061 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. இப்பின்னடைவிற்கு ஏனைய செயற்திட்டங்களிலிருந்து மாற்றங்கள் ரூபா 26,312,248 இனால் குறைவடைந்தமை, வழங்கல் மற்றும் நுகர்வுகளுக்கான செலவினங்கள் ரூபா 2,320,336 இனால் மற்றும் சம்பளம் மற்றும் வேதனச்செலவுகள் ரூபா 5,741,431 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறியியல் பிரிவினரால் 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பின் அறுவடை இயந்திரத்தைச் செயற்படுத்தல் தொடர்பான NVQ 3 மற்றும் 4 ஆம் மட்டத்திலான சான்றிதழ் கற்கைநெறி அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் கற்கைநெறிக்கான பாடத்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் ஒழுங்கமைத்தல் நடவடிக்கைகளுக்காக ரூபா 178,062 செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறான கற்கைநெறி நடாத்தப்படவில்லை. | நிறுவனத்தில் இந்தப் கற்கைநெறியின் அனைத்துப் பகுதிகளையும் உள்ளடக்குவதற்குத் தேவையான பணியாளர்கள் மற்றும் பௌதீக வளங்கள் இல்லாததால், அந்தப் கற்கைநெறிகளைத் தொடங்குவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. | நிறுவனத்தின் விடயப் பரப்பிற்கான நோக்கங்கள் மற்றும் திறன் ஆகியவற்றுக்கு ஏற்ற கற்கைநெறிகள் மட்டுமே தொடங்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2017 ஆம் வருடத்திலிருந்து 2019 வருடம் வரையான காலப்பகுதிக்குள் செயற்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த இலங்கையின் விவசாயப் பொருட்களின் வழங்கல் மற்றும் மதிப்புச் சங்கிலி முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக 2018 ஏப்ரல் 05 ஆம் திகதி வருடத்தில் ரூபா 1,290,000 செலவிடப்பட்டு 100 Gps Trackers unit மற்றும் 2018 மார்ச் 22 ஆம் திகதி ரூபா | 2019 ஆம் ஆண்டில், தேவையான அனைத்து உபகரணங்களையும் செயற்படுத்த தேவையான ஏற்பாடுகள் பெறப்படாததால், எதிர்பார்த்தபடி பயன்படுத்த முடியவில்லை.<br><br>இந்த உபகரணங்கள் அனைத்தும் எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 4,680,000 செலவிடப்பட்டு 130 Tempered data loggers கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2023 பெப்ரவரி 24 ஆந் திகதி வரையில் 72 Gps Trackers unit மற்றும் 09 Tempered Data Loggers என்பன பயன்படுத்தப்படாது களஞ்சியசாலையில் காணப்பட்டன. குறிப்பிட்ட உபகரணங்கள் பயனுள்ள வகையில் பாவனைக்கு எடுக்கப்படாத காரணத்தினால் இச்செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 7,292,332 ஆன தொகை பொருளாதாரமற்ற செலவொன்றாக காணப்பட்டது. | | |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 01 ஆம் தேதி தொடங்கப்பட்டு 2020 திசெம்பர் 31 ஆம் திகதி முடிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த "Design & Construction Of A Tunnel Type Forced – Air Cooler For Cooling Of Fresh Mango" ஆராய்ச்சி செயற்திட்டம் கணக்காய்வு திகதியான 2023 பெப்ரவரி 24 வரையில் ஆராய்ச்சி செயற்பாட்டு நிலையில் காணப்படவில்லை. | ஆராய்ச்சிக்காக வாங்கப்பட்ட பெல்ட் கன்வேயர் மற்றும் இரசாயனங்கள் ஏனைய ஆராய்ச்சிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. | செயற்திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். |
| (ஆ) | அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகத்தில் செயற்படுகின்ற ஆராய்ச்சிப்பிரிவின் மூலம் ஆராய்ச்சி செயன்முறைகளின் பின்னர் புதிய கண்டுபிடிப்புக்களை உற்பத்தி செய்தல் மற்றும் அவற்றை சமூகமயப்படுத்தல் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாகும். இருந்தபோதிலும், மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின்போது 2000 ஆம் ஆண்டிலிருந்து கணக்காய்வுத் திகதியான 2023 | இந்த பெரும்பாலான இயந்திரங்கள் ஆராய்ச்சிகள் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டு 10 வருடங்களை விட அதிக காலம் கடந்துள்ளமையால் இயந்திரங்களை சமூகமயப்படுத்துவதில் சிரம் காணப்படுகின்றது. | சமூகத்தின் தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு இயந்திரங்களை உற்பத்தி செய்யவும், அவற்றை சமூகமயப்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மார்ச் 20 வரையான 23 வருட காலப்பகுதியில் இயந்திரப் பணிமனையில் பராமரிக்கப்பட்டு வருகின்ற தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பதிவேட்டின் பிரகாரம் வெளியிடப்பட்டுள்ள புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட 19 வகையான இயந்திரங்களில் ஒரு வகையான இயந்திரம் மாத்திரமே சமூகமயப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | ஆராய்ச்சி வழிகாட்டுதல்கள் கோவையின் பிரகாரம் ஆராய்ச்சிகளின் இறுதி அறிக்கைகளைச் சமர்ப்பித்த பிறகு, அந்த ஆராய்ச்சி அங்கீகரிக்கப்பட்ட இதழில் வெளியிடப்பட வேண்டும் அல்லது ஒரு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2015 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஆராய்ச்சி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்ட 20 ஆராய்ச்சிகள் அங்கீகரிக்கப்பட்ட இதழில் அல்லது ஒரு மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சிகள் அங்கீகரிக்கப்பட்ட சஞ்சிகை அல்லது மாநாட்டில் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆராய்ச்சிகள் அங்கீகரிக்கப்பட்ட சஞ்சிகை அல்லது மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஆராய்ச்சிக்காக கொடுக்கப்பட்ட காலப்பகுதிக்குள் இறுதி அறிக்கைகள் வழங்கப்பட வேண்டிய போதிலும், காலக்கெடு முடிவடைந்த 05 ஆராய்ச்சிகளுக்கான இறுதி அறிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2023 பெப்ரவரி 24 வரை வழங்கப்படாததுடன் தாமத காலம் 02 முதல் 05 வருடங்களுக்கு இடையிலான காலப்பகுதியாக இருந்தது. | 02 இறுதி அறிக்கைகள் பல்வேறு காரணங்களால் சமர்ப்பிக்கப்படாததுடன் 03 அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.. | இறுதி ஆய்வு அறிக்கைகளை உடனடியாக வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | 2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்டு தற்போது பூர்த்தி செய்யப்பட்ட சமூக முக்கியத்துவம் வாய்ந்த 04 ஆராய்ச்சித் திட்டங்களில் காணப்பட்ட முடிவுகள் சமூகமயப்படுத்தப்படாமையால் ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் அல்லது செயற்திட்ட அலுவலகங்கள் மூலம் சமூகமயப்படுத்தப்படுவதற்கு போதியளவு நடவடிக்கை | ஆராய்ச்சி முடிவுகளை சமூகமயப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆராய்ச்சி முடிவுகளை உடனடியாக சமூகமயப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எடுக்கப்படாமையால் அந்த ஆராய்ச்சித திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்படவில்லை. | | |
| (ஊ) ஆராய்ச்சிப்பிரிவின் மூலம் ஆராய்ச்சி செயன்முறைகளின் பின்னர் புதிய கண்டுபிடிப்புக்களை உற்பத்தி செய்தல் மற்றும் அவற்றை சமூகமயப்படுத்தல் பிரதான குறிக்கோளாக இருந்தபோதிலும், 2000 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வு திகதி வரை பேடண்ட் உரிமம் 09 இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கு மட்டுமே பெறப்பட்டிருந்தது. | எங்கள் நிறுவனம் 2012 ஆம் ஆண்டு முதல் பேடண்ட் உரிமத்தைப் பெறுவதற்கான செயல்முறையைத் தொடங்கியது. அதன் பிறகு, தயாரிப்புகளுக்கான பேடண்ட் உரிமத்தைப் பெறுவதற்கான செயல்முறை மேற்கொள்ளப்படுகின்றது. . | பேடண்ட் உரிமத்தைப் பெறுவதற்கான செயல்முறை உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விவசாய பயிர்களின் அறுவடைக்குப் பின்னரான சேதத்தைக் குறைப்பதே நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருப்பதுடன் அதற்காக 2009 ஆம் வருடத்தில் நடாத்தப்பட்ட ஆரம்பகட்ட கணிப்பீட்டின் பிரகாரம் அழியாத விவசாயப் பயிர்களின் அறுவடைக்குப் பின்னரான சேதம் 30 சதவீதம் மற்றும் 40 சதவீதத்திற்கு இடைப்பட்டதாக காணப்பட்டமை அடையாளம் காணப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதியில், கணக்கெடுப்பு நடாத்தப்பட்டு 12 ஆண்டுகள் கடந்திருந்ததுடன் 2022 ஆம் ஆண்டளவில் அறுவடைக்குப் பின்னரான சேதம் குறைக்கப்பட்டிருந்த அளவானது சதவீதமாக எவ்வளவு என்பதை அடையாளம் காணக்கூடிய தரவுத்தளமொன்று நிறுவனத்திடம் இருக்கவில்லை. | கடந்த காலங்களில் இலங்கையில் அறுவடைக்குப் பின்னரான சேதத்தின் அளவைக் குறைப்பதற்கும் விவசாயப் பயிர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும் பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 வரை ஆய்வு கூடத்தில் காணப்பட்ட மொத்த பெறுமதி ரூபா 8,336,705 ஆன Atomic | இந்த 02 இயந்திரங்களை பழுதுபார்ப்பதற்காக, 02 இயந்திரங்களின் பெறுமதியை விட, அதாவது ரூபா 10.5 மில்லியனை விட அதிகமான | இயந்திரத்தை பழுதுபார்த்து பயன்பாட்டுக்கு கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | Absorption Spectrophotometer மற்றும் Handle Wheel Vertical Autoclave ஆகிய 02 இயந்திரங்கள் செயலிழந்த காரணத்தினால் இந்த இயந்திரங்கள் பயன்னடுத்தப்படுகின்ற ஆராய்ச்சி நடவடிக்கைகள் முறையே 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் நிறுத்தப்பட்டன. இந்த இயந்திரங்களை திருத்தங்கள் செய்து பயன்படுத்துவதற்கான திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமொன்று நிறுவனத்திடம் இருக்கவில்லை. | விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. எனவே விவசாய அமைச்சிடம் நிதி ஒதுக்கீடுகள் கோரப்பட்ட போதிலும் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்படவில்லை. | வேலைத்திட்ட மொன்று உருவாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அறுவடைக்குப் பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவகத்தில் மேற்கொள்ளப்படும் பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ஆய்வுக்கூடங்களுக்குத் தேவையான ஆய்வுக்கூட உபகரணங்கள் வரையறுக்கப்பட்ட தேவைகளின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் மேற்படி உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறைக்கப்பட்டதன் அடிப்படையில் மொத்தப் பெறுமதி ரூபா 7,878,705 ஆன 03 உபகரணங்கள் விளைவற்றதாகக் காணப்பட்டன. இங்கு நடாத்தப்படும் ஆராய்ச்சிகளின் அளவு குறைவாக இருப்பதால், அந்த உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக இருப்பதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | AAS இயந்திரம் 2015 முதல் 2018 வரை பகுப்பாய்விற்கு தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் கடந்த ஆண்டு இந்த இயந்திரம் செயல்படாமல் இருந்ததால் பயன்படுத்த முடியவில்லை. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய உபகரணங்களும் தேவைக்கேற்ப ஆராய்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. | ஆய்வுகூட உபகரணங்கள் குறைவாகப் பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு திட்டமிடப்பட்ட வேலைத்திட்ட மொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |

**3.5 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டாம் நிலை பதவிகளில், 27 முகாமைத்துவ உதவியாளர் அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் காணப்பட்டதுடன் | சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் மற்றும் 5 பதவிகளுக்கான வெற்றிடங்கள் இருப்பதால் சேவை நீட்டிப்புகள் | குணக்காய்வு அவதானிப்புக்கள் மீளாய்வு செய்யப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளபடியான பதவியணி 22 ஆகும். அந்த உத்தியோகத்தர்களுக்குப் பணிகளை ஒதுக்கும் போது, நிறுவனத்தினால் ஆற்ற வேண்டிய ஒட்டு மொத்த செயல்திறன் மதிப்பீடொன்று செய்யப்பட்டு, பணி ஒதுக்கீடுகள் திருப்திகரமான நிலையை அடையும் வகையில் செய்யப்படவில்லை. வெற்றிடங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட இரண்டு ஊழியர்களின் சேவை நாட்கள் தொடர்ந்தும் நீடிக்கப்பட்டு 2022 திசெம்பர் 31 இல் ரூபா 1,372,046 சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. | வழங்கப்படுகின்றன. | நிறுவனங்கள் வெளிப்படைத் தன்மையை அடையும் வகையில் அதிகாரிகளுக்கான செயற்பாடுகள் ஒதுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் PL 1 தொகுதியில் ஊழியர் வெற்றிடங்கள் இல்லாதபோது மற்றும் காவலர் பதவிக்கான 06 அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை PL 1 தொகுதியின் ஊழியர்களிடமிருந்து பூர்த்தி செய்ய முடியுமாக இருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி அறிக்கையின்படி பிரதான வாயிலில் பணிக்கமர்த்தப்பட்ட காவலர்கள், விடுதி வாசலில் பாதுகாப்பு பணியில் மற்றும் அலுவலகத்தில் பல்வேறு பணிகளுக்காகவும் ஈடுபடுத்தப்பட்டு பிரதான வாயிலில் காவலர் பணிகள் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் சிவில் காவலர்களிடமிருந்து வழங்கப்பட்டிருந்தமையால் 2018 முதல் 2022 திசெம்பர் 31 வரையிலான காலப்பகுதியில் அந்தத் திணைக்களத்திற்கு ரூபா 13,569,700 செலுத்தப்படடிருந்தது. | பணிப்பாளர் சபை பத்திரம் BP 975 மூலம் சிவில் காவலரின் சேவைகள் பெறப்பட்டது. விடுதி வளாகத்தில் பாதுகாப்புக்காக ஏராளமான காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். பாதுகாப்பு பணியை நிறுவனத்தின் காவலர்கள் மேற்கொண்டால், தற்போதுள்ள அதிகாரிகளை விடக் கூடுதலாக இரண்டு அதிகாரிகளை பணிக்கமர்த்துவதற்கு அனுமதி பெறப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றுதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கமத்தொழில் அமைச்சின் ஒதுக்கீடுகளின் மூலம் தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படுகின்ற 07 உணவு வகைகளில் 04 கனரக உலோக கலப்படங்கள் உள்ளடங்கியுள்ளதா என மதிப்பிடுவதற்கு அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்திற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,956,120 செலவிடப்பட்டு 500 மாதிரிகள் பரீட்சிக்கப்பட்டன. இச்சோதனைகள் அடங்கிய செயற்திட்ட அறிக்கையின் பிரகாரம் உணவுப் பொருட்களில் அதிகூடிய பாதுகாப்பு மட்டங்களை விஞ்சியதாக Cadmium, Arsenic and Leaf போன்ற கனரக உலோகக் கலப்படங்கள் உள்ளடங்கியுள்ளதாக சோதனைகளின் போது குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அவ்வறிக்கையின் முடிவுகள் மற்றும் திட்டத்தின் பிரகாரம் கனரக உலோக கலப்படங்கள் உள்ள உணவுப் பொருட்கள் சம்பந்தமாக மேலதிகச் சோதனைகள் நிறுவகத்தினால் செய்யப்பட்டு அது சம்பந்தமான தகவல்கள் சரியான தீர்வுகளை காணும் வகையில் பொறுப்பு வாய்ந்த சகல தரப்பினருக்கும் கொடுக்கப்படாத காரணத்தினால் ஆராய்ச்சிக்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவினமாக காணப்பட்டது | 500 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு இறுதி அறிக்கை கமத்தொழில் அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கமத்தொழில் அமைச்சின் அனுமதியின்றி அறிக்கை ஏனைய தரப்பினருக்கு வழங்கப்படுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2016 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆகஸ்ட் மாதம் வரை செயற்படுத்தப்பட்ட பழங்கள் பழுக்க வைப்பதற்கான சேதன முறைமையை அறிமுகம் செய்தலுக்கான | இந்த ஆராய்ச்சியில் அடையாளம் காணப்பட்ட தொழில்நுட்பம் கரிமப் பயிர்களுக்கு சுகாதாரமான பழுக்க வைக்கும் முறையாகப் பயன்படுத்தப்படலாம் என்பது | கணக்காய்வு அவதானிப்புகளை மீளாய்வு செய்து தீர்ப்பதற்கு முறையான நடவடிக்கைகள் |

| | | |
|---|---|---|
| ஆராய்ச்சியிலான (Induction Of Fruit Ripening By Organic method) கண்டுபிடிப்புக்களுக்காக பேடன்ட் உரிமை பெறல் மற்றும் ஆராய்ச்சியின் முடிவுகளை வர்த்தக மட்டத்தில் பரிமாற்றம் செய்தல் போன்ற நோக்கங்களுக்காக ரூபா 9,572,715 செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வத் திகதியான 2023 பெப்ரவரி 24 ஆந் திகதி வரையில் இச்செயற்திட்டம் செயற்படுத்தப்படவில்லை. | அவதானிக்கப்பட்டது. வணிக ரீதியாக நம்பகத்தன்மை இல்லாததால் பேடன்ட் உரிமை பெறப்படவில்லை. | எடுக்கப்பட வேண்டும். |